

## எஸ்.குமரன்

பேராசிரியர்முனைவர்எஸ்.குமரன்அவர்கள்மலாயாப்பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் இணைப்பேராசிரியர்களுள் ஒருவர். 1986ஆம் ஆண்டு தொடங்கி இந்திய ஆய்வியல் துறையில் பணிபுரிந்து வருகின்றார். இப்பல்கலைக்கழகத்தில் 1985ஆம் ஆண்டு இளங்கலைப்பட்டமும், 1989ஆம்

ஆண்டு முதுகலைப் பட்டமும் 1990ஆம் ஆண்டு கல்வியியலில் பட்டயமும் (டிப்ளோமா) பெற்றவர். 1986ஆம் ஆண்டு தொடங்கி 1989ஆம் அண்டு வரையில் துணை விரிவுரையாளராகவும், 1999 ஆம் ஆண்டு வரை விரிவுரையாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் இணைப்பேராசிரியராகவும்பணியாற்றிவருகின்றார். 2006ஆம் ஆண்டு தொடங்கி 2013ஆம் ஆண்டு வரையில் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவர். மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயலாளராகவும், மலேசியத் தமிழ்க் காப்பகத்தின் துணைத் தலைவராகவும், பல கல்வி, சமூக அமைப்புகளின் ஆலோசகராகவும் பணியாற்றி வருபவர்.

பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி, சங்க இலக்கியம், சிற்றிலக்கியம், ஆராய்ச்சியியல், ஊடகவியல் ஆகிய பாடங்களைப் போதிக்கிறார். 22 முதுகலை மாணவர்களையும் 12 முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களையும் உருவாக்கியவர். 80க்கு மேற்பட்ட தமிழ்நாடு, கேரளா, டில்லி, மற்றும் இலங்கையைச் சார்ந்த முனைவர் பட்ட ஆய்வேடுகளுக்குப் புறநிலைத் தேர்வாளராகப் பணியாற்றியவர். ஆசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் இருந்து பல்துறை சார்ந்த 75 புத்தகங்களை இயற்றியவர். 80க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழ், ஆங்கிலம், மலாய் ஆகிய மொழிகளில் எழுதி அனைத்துலக ஆய்வு இதழ்களில் வெளியிட்டவர். 185 உள்நாட்டு, பன்னாட்டு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தவர்.

001915

முனைவர்

# ச. சிங்காரவேலு



லேசியாவில் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் ர்க்கணக்கானோர் பட்டம் பெற்றுச் சென்றாலும், ஐம்பதுக்கும் மேற்பட்டோர் ரையாளர்களாகவும் பேரசிரியர்களாகவும் பணியாற்றியிருந்தாலும் இன்றும் திய ஆய்வியல் துறை என்றாலே அதன் குறியீடாக (வீநீஷீனி) இருப்பவர் றைநிலைப் பேராசிரியர் முனைவர் ச. சிங்காரவேலு அவர்கள் மட்டுமே.

■ எஸ்.குமரன் ■

**Editorial Team**

Dr. Aranga.Pari
Dr. Pa.Su. Moovendan
Dr. J. Raja

Dr. R. Mohana Dass
Dr. S. Kumaran
Dr. Krishanan Maniam

Dr. Oppila Mathivanan
Dr. Apitha Sabapathi

₹ 60.00

**Dr. S. Singaravelu**

by

**S. Kumaran**

First Edition 2015

**Published by**

Kalaignaan Pathipagam

19, Kannadhasan Salai,

T.Nagar, Chennai - 600 017.

044-24345641, 24313221

email:anuragam78@gmail.com

**Designed by**

Satyan layout, Chennai - 600 005.

044-42663451

**Printed at**

M.K. Offset, Chennai.


# பதிப்பாசிரியர்கள் உரை

நீண்ட பாரம்பரியமும், தொன்மையான மரபும் மிக்க மொழி தமிழ். இலக்கிய, இலக்கண வளமை பெற்ற அம்மொழியில் எண்ணுதற்கு அரிய சான்றோர் பெருமக்கள் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர். தமிழ் மொழியின் ஆழம் அறிந்து, தம் புலமையால் சிறப்பாகப் பணியாற்றியும், தம் புகழ் நிறுவியும் சென்றவர்கள் தமிழறிஞர்கள்.

அந்தப் புலமை மரபு மறைந்து விடவில்லை. தமிழறிஞர்களின் மரபு இன்னும் உயிர்ப்புடன் உலா வந்து கொண்டிருக்கிறது.

வாழ்ந்த, வாழும் தமிழறிஞர்களின் சிறப்புமிக்க பணியினை ஒரு வரலாற்று ஆவணமாகப் பதிவு செய்தால், அதனை இன்றைய மாணவருலகம் அறிந்துகொள்ளும் என்ற நோக்கில், அப்படிப்பட்டோரின் வாழ்வும் பணியும் பற்றிய தகவல்களை நூல் வடிவமாகக் கொணர்ந்துள்ளோம்.

தமிழறிஞர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், இத்திட்டத்தை விரிவுபடுத்தி, தமிழ் படைப் பாளிகளையும் அவர்தம் படைப்புகளையும் சிறப்பிக்கும் வகையில் நூல்வடிவம் ஆக்கியுள்ளோம்.

தமிழுக்குத் தொண்டாற்றிய அண்ணாமலைப் பல் கலைக்கழகமும், மூன்று முறை உலகத் தமிழ் மாநாடு நடத்திய மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், வைர விழாக் காணும் சென்னை கலைஞன் பதிப்பகத்துடன் இணைந்து மீண்டும் செயல்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

முனைவர் அரங்க. பாரி
முனைவர் ப.சு. மூவேந்தன்
முனைவர் ஜா. இராஜா

முனைவர் ஆர்.மோகனதாஸ்
முனைவர் எஸ்.குமரன்
முனைவர் கிருஷணன் மணியம்

முனைவர் ஒப்பிலா. மதிவாணன்
முனைவர் அபிதா சபாபதி

